# மானிப்பாய்ப் பட்டினசபைத் தலைவரின்

# பரிபாலன அறிக்கை

இவ்வறிக்கை

*1-1-65* தொடங்கி — *30-6-66* வரைக்கும்

நடைபெற்ற

**வேலைகளைக் கொண்டன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய்ப் பட்டினசபைத்

# தலைவரின் பரிபாலன அறிக்கை

### இவ்வறிக்கை 1-1-65 தொடங்கி 30-6-66 வரைக்கும் நடைபெற்ற வேலைகளைக் கொண்டதாகும்

மானிப்பாய் பட்டினத்தின் சனத்தொகை 6000
விஸ்திரணம் 2 சதுரமைல்

1 சபையின் அமைப்பு

ஆக்கத் திகதி ..............................1950ம் ஆண்டு

| அங்கத்தவரின் பெயர் | வட்டார இல. | சமுகமளித்த கூட்டங்கள் 1965 மார்கழி வரை |
|---|---|---|
| (1) சி. இராசேந்திரன் | 1 | 19 |
| (2) செ. அப்புத்துரை | 3 | 19 |
| (3) சி. முத்துக்குமாரசாமி | 5 | 18 |
| (4) ச. க இராசகாரியர் | 4 | 12 |
| (5) அ ஐயம்பிள்ளை | 2 | 19 |

தலைவர்: சி. இராசேந்திரன் யே.பி. தெரிவுசெய்யப்பட்டதிகதி: 15-1-66
உப-தலைவர்: செ. அப்புத்துரை யே. பி. 30-1-65—29-1-66 வரைக்கும்
ச. க. இராசகாரியர் 21-2-66 தொடக்கம்.
1965யின் உப-தேர்தல் இல்லை

2. கூட்டங்கள்: 1965ம் ஆண்டு

மாதாந்தக் கூட்டம் – 12 விசேஷ கூட்டம் – 7
நிறைவெண் இல்லாமல் ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் – இல்லை
கூட்டங்கள் நடக்காத மாதம் – இல்லை

| 3. நிதி | 1964 | 1965 |
|---|---|---|
| சோலைவரி வீகிதம் | 9% | 9% |
| மலகூட கட்டணம் வாழி ஒன்றுக்கு | 3/- | 3/- |
| தண்ணீர் வரி | இல்லை | இல்லை |
| சோலைவரி திரட்டப்பட்டதா | இல்லை | இல்லை |
| ஆதனங்களின் மொத்த மதிப்பு | 1964 | 1965 |
| முடிக்குரிய ஆதனங்களைத் தவிர்ந்த | 242,065/- | 252,440/- |

அரசாங்க மதிப்பாளரால் கடைசியாக மதிக்கப்பட்ட வருஷம் 1957
மதிப்பு எப்போ அமுலுக்கு கொண்டுவரப்பட்டது 1958
மதிப்பு வருகிற ஆண்டு செய்ய ஒழுங்குசெய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வரவு செலவு மொத்தம் சென்ற வருஷத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பின்

| | 1964 | 1965 |
|---|---|---|
| மொத்த வருமானம் (பொது) | 51,855-61 | 51,370-95 |
| ,, (மின்சாரம்) | 87,436-15 | 84,021-15 |
| ,, செலவு (பொது) | 45,517-03 | 46,748-37 |
| ,, செலவு (மின்சாரம்) | 82,267-69 | 94,434-34 |

மிகைக் கூடியதும் குறைந்ததும் பற்றிய நிரல்:—

| | பொது | மின்சாரம் |
|---|---|---|
| 1-1-65ல் மிகைக்கூடியது | (கூடி) 21,403-78 | (குறை) 17,085-36 |
| 1965யின் வருமானம் | 51,370 95 | 84,021.15 |
| | 72,774-73 | 66,935-79 |
| 1965யின் செலவு | 46,748-47 | 94,434-34 |
| 31-12-65ல் மிகைக் கூடிய/குறைந்த திரட்டப்பட்ட தொகை | 26,026 36 | 27,498-55 |

குறிப்பு: 1965ம் ஆண்டின் மின்பகுதி செலவு கூடியதின் காரணம்: சென்ற வருடங்களில் மின் இலாகாவுக்கு போமதியான பெருந் தொகை கொடுபடாமல் இருந்ததை இந்த வருடத்தில் கொடுக்கப்பட்டது. இது கொடுக்கப்படாவிடில் மின் மாற்றியை 80. கெ. வி. எ. யிலிருந்து 150 கெ. வி. ஏக்கு மாற்ற முன் வந்திருக்க மாட்டார்கள். இப்போ 150 கெ. வி. எ. ஆக மாற்றியிருக்கிறபடியால் எத்தனையோ ஆட்களுக்கு மின்சாரம் வினியோகம் செய்து வருமானத்தை இரண்டு ஒரு (2—1) வருடத்தில் கூட்டிவிடலாம்.

6. 31--12—65ல் பிரதான வருமான நிலுவை

| காலம் | சோலை வரி | மலகூட வரி | வாடகை | மின்சாரம் |
|---|---|---|---|---|
| 31-12.65யிலுள்ள நிலுவை (1964ம் ஆண்டிற்கும் அதற்கு முந்தியவையும்) | 26,427/- | 252/- | 164/- | — |
| 31-12-65யிலுள்ள நிலுவை (1-1-65—30-9-65வரைக்கும்) | 4,334/. | 105/- | 1640/- | 16,555 [கார்த்திகை வரைக்கும் |
| 1965ம் ஆண்டு 4ம் கந்தாயம் நிலுவை | 5,016/- | 151/. | — | 6,284/- [மார்கழி வரைக்கும் |

இந்த ஆண்டில் வட்டாரம் வட்டாரமாக பழைய நிலுவைகள் அறவாக்கப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. 1966ம் ஆண்டின் வரவு செலவு திட்டம்

| | பொது | மின்சாரம் |
|---|---|---|
| மதிக்கப்பட்ட வருமானம் | 53,915-00 | 95,020.00 |
| ,, செலவு | 51,882-00 | 89,807-00 |
| ,, கூடுதல் | 2,033-09 | 5,213-00 |

8. 1965ம் ஆண்டில் கிடைத்த நன் கொடைப் பணம்

| | 1-1 65ல் மிஞ்சியவை | 1965ல் கிடைத்தவை | செலவு செய்யபட்டவை |
|---|---|---|---|
| பிரசவ, சிசு பரிபாலனம் | | 1,000-00 | 1,099-00 |
| ஆயுள்வேத ஆஸ்பத்திரி | 904-37 | – | – |
| சேரி ஒழிப்புத் திட்டம் | 4,534-25 | – | – |
| வீதி திருத்த | – | 1,971/- | 1,873-17 |
| | 1-1-65ல் | 1965ல் | 31-12-65ல் செலவு |
| வாசிகசாலை | 5-79 | 500/- | – |
| விளையாட்டு மைதானம் | – | 5000/- | – |
| சனசமூக நிலையம் | 375-00 | 330/- | 475/- |

| 9. 1965ல் எடுக்கப்பட்ட கடன் எடுக்கப்பட்ட இடம் | தொகை | காரணம் |
|---|---|---|
| உள்ளூர் அபிவிருத்தி கடன் நிதி | 10,000/ | பட்டினசபை மண்டபத்திற்கு தேவைப்படும் காணி கொள்வனவு செய்ய. |

10. கடன்பட்ட நிலைமை

| | |
|---|---|
| 31-12-65 வரைக்கும் எடுத்த மொத்தக் கடன் | 173,500-00 |
| 31-12-64 வரைக்கும் எடுத்த பாக்கிக் கடன் | 127,037-53 |
| 1965ல் 31-12-65 வரைக்கும் கிடைத்த கடன் | 10,000-00 |
| 1965ல் 31-12-65வரைக்கும் கொடுபட்ட கடன் | |
| முதல் | 6,782-06 |
| வட்டி | 5,081-49 |
| 31-12-65ல் பாக்கி மொத்தக் கடன் | 130,255.47 |

கடன் கணக்கின் நிலைமை

| தொகை | காரணம் | எடுத்த திகதி | வட்டி வீதம் | கட்ட வேண்டிய வருஷத்தொகை | 1-1-66 மிகுதி |
|---|---|---|---|---|---|
| 20,000/- | மின்சாரம் | 11-6.51 | 4% | 1346–18 | 12,811-17 |
| 70,000/- | ,, | 26-4.52 | 4% | 4711–63 | 42 329-76 |
| 60,000/- | ,, | 26 6-54 | 4% | 4038–54 | 45,374-54 |
| 23,500/- | காணி கொள்வனவு செய்ய பட்டினசபை கட்டிடத்திற்கு | 26-4-61 | 4% | 940– | 19,740-00 |
| 10,000 | மேலதிக காணி கொள்வனவுக்கு | 27-7-65 | 4% | 500/– | 10,000-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தேய்மானத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி

| சேவை | 1964ம் ஆண்டு முடிவில் இருந்தவை | 1965-ம் ஆண்டில் சேர்க்கப்பட்டவை | 1965-ம்ஆண்டு முடிவில் உள்ளவை |
|---|---|---|---|
| மின்சாரம் | இல்லை | 300/- | 300/- |
| தண்ணீர் விநியோகம் | இல்லை | இல்லை | இல்லை |

12. 1965 ம் ஆண்டின் வருமானமும் செலவும்

| வரவு | | செலவு | |
|---|---|---|---|
| பொது வருமானம் | 4,4114-05 | பொது செலவு | 23,446-14 |
| பொதுப் பாதைகள் | 540-25 | பொது பாதைகள் | 7,567-51 |
| சபைக் காணிகளும் கட்டிடங்களும் | 252-50 | சபைக் காணிகளும் கட்டிடங்களும் | 4,397-76 |
| பகிரங்க சுகாதாரம் | 5923-75 | பகிரங்க சுகாதாரம் | 7,688-69 |
| பகிரங்க பொழுதுபோக்கு | 302-70 | பகிரங்க பொழுது போக்கு | 2-00 |
| சுடலைத் தகனக்கட்டணம் | 92-00 | சவக்காலை காவலாளர் | 1,130-64 |
| நாய்கள் பதிவு | 30-00 | நாய்கள் பதிவு | 25-00 |
| நூல் நிலையமும் வாசிகசாலையும் | 105-00 | நூல் நிலையமும் வாசிகசாலையும் | 2,490-63 |
| | 51,370-95 | | 46,748-37 |

| ஏனைய வரவுகள் | | ஏனைய செலவுகள் | |
|---|---|---|---|
| வைப்புப் பணம் | 10.631-58 | வைப்புப் பணம் | 14,427-59 |
| முற்பணம் | 12.567-43 | முற்பணம் | 3,871-39 |
| பழைய பாக்கி வரவு | 7,341-08 | பழைய பாக்கி | 12,166-93 |
| பழையபாக்கி செல்மதி | 60.261-86 | பழைய செல்மதி | 52,616-85 |
| மின்சாரப் பகுதி | 84,021,15 | மின்சாரப் பகுதி | 94,434-34 |
| பழைய கணக்கால் | 778-49 | | |
| தேய்மானத்துக்கு சேர்க்கப்பட்டது | 300-00 | | |
| கடன் | 10,000-00 | கடன் | 10,000-00 |

| வரிஅறவுக் கணக்கு | | வரிஅறவுக் கணக்கு | |
|---|---|---|---|
| ஆதனவரி | 17,576-26 | ஆதனவரி | 21,193-48 |
| மலகூட கட்டணம் | 171-00 | மலகூட கட்டணம் | 192-00 |
| மின்சார கட்டணம் | 66,154-07 | மின்சாரக் கட்டணம் | 70,086-90 |
| விருந்துப் பணம் | 227-83 | விருந்துப் பணம் | 803-65 |
| வாடகைக் கட்டணம் | 3,267-75 | வாடகை கட்டணம் | 4,660-50 |
| 1-1-65ல் பாக்கி | 8,453-82 | 31-12-65ல் பாக்கி | 9,921-27 |
| | 341,123-27 | | 341,123-27 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31–12–65யின் ஐந்தொகைக் கணக்கு

**கொடுக்குமதி**

| | |
|---|---|
| கட்டுப்பணங்கள் | 25,148-61 |
| பழைய செல்மதி | 60,489-89 |
| தேய்மானக் கணக்கால் | 300-00 |
| 1-1-65 மிகுதிப் பணம் 21,403-78 | |
| 1965 வருமானம் 51,370-95 | |
| 72,774-73 | |
| 65 செலவு 46,748-37 | |
| 31-12-65ன் மேலதிகம் | 26,026-36 |
| | 111,964-86 |

**இருப்புச் சொத்து**

| | |
|---|---|
| முற்பணம் | 2277-85 |
| ஆதனவரி | 30761-47 |
| மலகூட கட்டணம் | 372-00 |
| வாடகை பணம் | 1819-52 |
| விருந்துப் பணம் | 3064-18 |
| மின்சாரக் கட்டணம் | 23112-17 |
| பழைய பாக்கி | 13137-85 |
| **மின்சாரப் பகுதி** | |
| 1-1-65ல் குறைமானம் 17 085-36 | |
| 65ல் செலவு 94,434-34 | |
| 111,519-70 | |
| 65ன் வருமானம் 84,021-15 | |
| 31-12-65ல் குறைமானம் | 27,498-55 |
| ,, வங்கியில் பாக்கி | 9,921-27 |
| | 111,964-86 |

## மின்சாரப்பகுதி லாபநஸ்டக் கணக்கு

| | |
|---|---|
| 31–12–64 தளபாட கையிருப்பு | 4,930-40 |
| தயாரிப்பும் மற்றும் செலவுகள் | 80,460-40 |
| கடனின் ஆண்டுத் தொகை | 10,097-00 |
| | 95,487-80 |

| | |
|---|---|
| மின்சார விற்பனையும் மீற்றர் வாடையும் | 70,086-90 |
| வீதி வெளிச்சம் கணக்கால் | 4'658-73 |
| மற்றும் வருமானம் | 8,696-87 |
| 31-12-65ல் இருப்பு (தளவாடங்கள்) | 3,274-00 |
| நஸ்டம் | 8,771-30 |
| | 95,487-80 |

13. **பகிரங்க பாதைகள்**

| | |
|---|---|
| கல்போட்டு தார் ஊத்திய வீதிகள் | 6 மைல் |
| கிறவல் வீதிகள் | 5 மைல் |
| திறக்கப்பட்ட வீதிகளை கல்போட்டுத் தார் ஊத்தியும் கிறவல் போட்டும் திருத்தப்பட்டன. இவற்றிற்கு ஏற்பட்ட செலவு | 4,440-68 |

சந்தைக்கருகாமையால் போகும் ஒழுங்கை, தற்பொழுது பகிரங்க வேலை இலாகா றோட்டாக வந்து இந்த ஆண்டில் கல்லும் தாரும் போட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

14. **வாடி வீடுகள்** இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. சபைக்காணிகளும் கட்டிடங்களும்:

பொதுமக்களின் உதவியாலும் களியாட்டு விழாவின் வருமானத்தாலும் ஓர் காரியாலயம் கட்டப்பட்டு சபைக்கு அன்பளிப்பாய் அளிக்கப்பட்டிருக்கிறது. 23,500 -ரூபா கடன் எடுத்து இதற்குரிய காணியை சபை கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது பொதுமக்கள் நகரமண்டபத்தையும் கட்டித்தருவதாக முன் வந்திருக்கிறபடியால் இன்னும் 3 பரப்புக் காணியை கொள்வனவு செய்வதற்கு உள்ளூர் அபிவிருத்தி கடன் நிதியிடமிருந்து 10,000/– கடன் எடுத்து யாழ்ப்பாண அதிபருக்கு கொடுத்திருக்கிறது. அக்காணியில் வசிப்பவர் அரசாங்க அதிபரின் தீர்வைக்கு மறுப்புக் கொடுத்திருக்கிறபடியால் கொள்வனவு காலதாமதப்பட்டிருக்கிறது. அதனால் கட்டிடவேலையும் தடங்கல் பட்டிருக்கிறது. கெதியில் அரசாங்கம் கொள்வனவு நிகழ்ச்சிகளை முடித்துக் காணியை ஒப்படைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

சந்தை:

பட்டினசபையின் நிதியைப் பெருக்கி மக்களுக்கு என்னும் கூடிய வசதிகளை உண்டாக்குவதற்கு வேறுபாதைகள் இல்லாதபடியால், சந்தையை அபிவிருத்தி செய்து அதனால் பல கடைகண்ணிகளை அவ்விடத்தில் ஸ்தாபித்து வருமானத்தைக் கூட்டும் நோக்கமாக நான் தலைவராய் வந்தவுடன் வேலைசெய்து வந்துள்ளேன். பட்டினங்கள் திட்டமிடும் இலாகாவுக்கு அறிவித்து அவருடைய உத்தியோகத்தரைக் கொண்டு சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு ஓர் திட்டம் வகுத்துக் கொடுக்கும்படி கேட்டுள்ளேன். அவர்களுடைய திட்டப்படி வேலை செய்வதற்கு பெரும்பாலான பணம் தேவைப்படுகிறபடியால் அதையும் கோரி அத்துடன் இப்பட்டினத்திலுள்ள ஓர் பிரமுகர் திரு. க. இராசலிங்கத்தின் பண உதவியைக் கொண்டு மூன்று தகரக்கடைகளைக் கட்டியிருக்கிறேன் இச் சந்தையின் தென்புறத்தில் 20–30 ஆட்கள் வியாபாரம் செய்ய கிடுகினால் வேயப்பட்ட மண்டபம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதைவிட மீன் விற்க ஒரு தகரக்கடையும் கருவாடுகள் விற்கஒரு தகரக்கடையும் கட்டப்பட்டு இருக்கிறது. முதல் முதலாக ஐக்கிய கூட்டுறவு சங்கத்தாரால் இருத்தல் கணக்காய் மீன் விற்கும் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இறைச்சிக் கடையும் புதிய ஆளுக்கு கூடிய வருமானத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வாகனங்கள் உட்சென்று சாமான்களை ஏற்றி இறக்கக் கூடிய வசதிக்காக சந்தை வாசலை அகட்டி இரு இரும்புக் கதவுகள் போடப்பட்டிருக்கின்றன. இப்போ செய்யப்படும் திருத்தத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக சந்தை வருமானம் சென்ற வருடங்களிலும் பார்க்க மிகக் கூடியிருக்கிறதென்பதை சந்தோஷத்துடன் அறியத்தருகிறேன். வழங்கம்போல் சந்தை வருமானத்தை அறவாக்க குத்தகையாய்க் கொடுக்காமல், ஓர் வாலிபரை அவ்வருமானத்தை அறவாக்க சம்பளத்திற்கு அவ் வேலையில் அமைக்கப் பட்டிருக்கின்றது. சந்தை இப்போ ஒரு புதுத்தோற்றத்தை 'காட்சி யளிக்கின்றது. இச் சந்தை இன்னும் இரண்டு வருஷங்களில் பெரும் வருமானத்தைக் கொண்டு வரக்கூடியதாக முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

**கிணறுகள்:**

இப்பட்டின மக்களுக்கு தண்ணீர் அவரவர்களிடம் இருக்கும் கிணறுகள் மிகவும் போதுமானவை. ஆனால் கயாம்புளி வட்டாரத்திலுள்ள மக்களுக்கு கிணறுகள் தோண்ட அவர்களுடைய குத்தகை வழவில் இடமில்லாதபடியால் அவர்கள் தண்ணீர் வசதியின்றி நெடுங்காலமாக வருந்துவதை நான் உணர்ந்து, ஓர் பிரமுகரின் உதவியை நாடி, பட்டினசபை கிணற்றிலிருந்து அக்கயாம் புளி மக்களுக்கு, குளாய் மூலம் தண்ணீர் விநியோகம் செய்திருக்கிறேன். இவ்விநியோகத்திட்டம் யாழ்ப்பாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கைங்கரியத்தை நான் கேட்டவுடன் செய்து உதவிய திரு. எஸ். இராசாவிக்கு நான் எனது நன்றியையும் மக்களின் நன்றியையும் செலுத்துகிறேன்.

**பகிரங்க மலகூடங்கள்:**

பகிரங்க மலகூடம் இப்பட்டினத்தில் மிகவும் குறைவு. சந்தைக்குள் இருக்கும் பகிரங்க மலகூடங்களைத் தவற்றி வேறு யாதும் கிடையாது. சில பல நெருக்கடியான வழவுகளில் உதாரணமாகக் கயாம்புளி பக்கத்தில் மலகூடம் கட்டும்படி சட்டத்தை நிலைநாட்ட முடியாமலிருக்கிறது. ஆகவே பகிரங்க மலகூடங்களை அப்பகுதிக்கு கட்டிக் கொடுக்க இப்பட்டினசபை முயற்சி எடுக்கின்றது.

**நகரசுத்தி தொழிலாளர் வசிப்பதற்கு இடவசதிகள்:**

நகரசுத்தி தொழிலாளர் வசிப்பதற்கு இடவசதி இல்லாதபடியால், இதற்குமுன் சந்தையில் கொட்டில் கட்டி இருந்தார்கள் தற்பொழுது, சிவன்கோயில் காணியில் ஓர் பகுதியை குத்தகைக்கு எடுத்து நகரசுத்தித் தொழிலாளர்களை அவ்விடத்தில் வீடு கட்டிக் கொண்டிருப்பதற்கு உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்க சுகாதாரம்:

இப்பட்டினத்தின் சுகாதாரசேவைகள், ஒரு சுகாதாரப் பரிசோதகர், இரு மருத்துவமாதர்கள், 4 நகரசுத்தித் தொழிலாளர்கள் 1 சுடலைத் தொழிலாளர் முதலியோரின் உதவியுடன் நிர்வகிக்கப் பட்டது. பட்டினத்தின் பொதுச் சுகாதாரம் திருப்திகரமாய் இருந்தது. கொள்ளை நோயோ அல்லது தொற்றுநோயோ எதுவும் பரவவில்லை. பட்டினப்பகுதியிலுள்ள சகல குழந்தைகளுக்கும் இளம்பிள்ளைவாதம் பரவவிடாது தடுப்பு மருந்துகள் விநியோகிக்கப் பட்டன.

1965-ம் ஆண்டு சுகாதாரவாரம் மிகச் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது. 7 நாளாக கொண்டாட்டம் நடைபெற்றது. பட்டினசபை அங்கத்தவர்களையும் மற்றும் பட்டினத்திலுள்ள எல்லாப் பாடசாலைகளின் பிரதிநிதிகளும், பிரதம ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் பிரபல பிரமுகர்களும் கொண்ட ஓர் கமிட்டி இக் கொண்டாட்டத்தை நடத்தியது. பட்டினத்தை ஏழு பிரிவாகப் பிரித்து ஒவ்வொருபகுதியை கமிட்டி திரட்டிய பணத்தைக்கொண்டு மேலதிக வேலையாட்களை நியமித்து துப்பரவு செய்யப்பட்டது. இதனால் பொதுமக்களுக்கு ஓர் புத்துணர்ச்சியை ஏற்படுத்தினதல்லாமலும், பட்டினசபை நகரசுத்தி -தொழிலாளர் எவ்வளவோ காலத்திற்கு செய்து முடிக்க முடியாத வேலையை மேற்குறித்த பெருந்தொகையான வேலையாட்கள் ஏழு நாட்களுக்குள் செய்து முடித்திருக்கிறார்கள். பிரபல வைத்திய நிபுணர்களை வரவழைத்து பள்ளிக்கூடங்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சுகாதாரத்தைப் பற்றி சொற்பொழிவுகள் கொடுக்கப்பட்டன. ஆரோக்கிய இராசா, ஆரோக்கிய தாய், ஆரோக்கிய சிசு, முதலியவைகளை தெரிந்து பரிசுகள் வழங்கப்பட்டன. ஆரோக்கிய உணவை காட்டும் ஓர் பொருட்காட்சியும் மற்றும் சுகாதாரத்தைப் பற்றிய படக்காட்சியும் காட்டப்பட்டது.

16. கொல்களமும் மடுவமும்:

தகுந்த கொல்களமும் மடுவமும் இப்பட்டினத்தில் இன்னும் அமைக்கப்படவில்லை. மாடு அடிப்பதை எவ்வளவோ காலத்திற்கு முன் பட்டினசபை தடைசெய்திருக்கிறது. ஆடுதான் அடிக்கப்பட்டு வருகிறது. ஆகவே பட்டினசபை சந்தையில் அறையைக் கொல்களமாகப் பாவிக்கப்பட்டு வருகிறது. பட்டினங்கள் திருத்தத்திட்டமிடும் இலாகாவின் அறிக்கையின்படி கொல்களமும் மடுவமும் ஸ்தாபிக்க உள்ளூர் ஆட்சி அபிவிருத்தி நிதியில் கடன் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

| | |
|---|---|
| 1964 ம் ஆண்டில் அடிக்கப்பட்ட ஆடுகள் | 322 |
| 1965 ம் ஆண்டில் அடிக்கப்பட்ட ஆடுகள் | 301 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பகிரங்க பொழுது போக்கு:

அதிகார் செல்லமுத்து விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் இருக்கும் மைதானம் இப்போ பட்டினசபையால் குத்தகைக்கு எடுக்கப்பட்டு விளையாட்டு மைதானமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இம் மைதானத்தை தகுந்த முறையில் திருத்தங்கள் செய்து பொதுமக்களுக்கு 25–1–66 ல் திரு: எஸ். சபாரத்தினம் உதவி அரசாங்க அதிபர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது அன்றையதினம் உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன. இந்த ஆண்டில் முதல் முதலாக ரூபாய் 5000/- விளையாட்டு மைதானத்திற்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

18. கீழ்வரும் புதிய பொதுச்சேவைகள் ஸ்தாபிக்கப்பட்டன:-

(1) திறந்த வெளி அரங்கு ஒன்று பட்டினசபை கட்டிட சபையினரால், பட்டினசபை காரியாலயத்திற் கருகாமையில், பட்டினசபைக் காணிக்குள் கட்டப்பட்டு முடிவடைந்து விட்டது.

(2) கயாம்புளி வாசிகளுக்கு இலவச குளாய் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது,

(3) 5 பஸ் பிரயாணிகள் தங்குமிடங்கள். பல்வேறு ஸ்தாபனங்களாலும் சபைகளாலும் பட்டினத்தின் பல பகுதிகளிலும் ஸ்தாபிக்கப்பட்டு, பட்டினசபைக்கு அன்பளிக்கப்பட்டிருக்கிறது மேற்சொல்லிய பிரயாணிகள் தங்குமிடங்களிலும் பிரதான சந்திகளிலும் கூடிய வெளிச்சமுடைய லாம்புகள் பொதுமக்களின் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது.

(4) ஊரவர்களுக்கு மா, பலா, தோடை, முதலிய பயிர்கள் இலவசமாக, தலைவரின் நிதியிலிருந்து வாங்கி கொடுக்கப்பட்டது.

(5) 2 ம் வட்டாரத்திலுள்ள நெல் வயல்களுக்கும், லெலன்கம குளத்திற்கும் போவதற்கும் அரைக்கட்டை நீளமுள்ள ஓர் புது ஒழுங்கை திறக்கப்பட்டது.

(6) தலைவரின் வேண்டுகோளுக்கிணங்கி மிருக வைத்திய இலாகா பட்டினசபை காரியாலயவளவிற்குள் மாடுகளை செயற்கை முறையில் சினைப்படுத்தும் ஓர் நிலையத்தை ஸ்தாபித்துள்ளது. இதனால் ஊரவர்கள் சொற்ப செலவுடன் பெரும் நன்மை பெறுகிறார்கள், தலைவரின் நிதியிலிருந்து ஸ்தாபிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) பட்டினசபையின் வேண்டுகோளுக்கிணங்க மானிப்பாய் வடக்கில் தபால் பெட்டி நிறுவப்பட்டிருக்கிறது. மானிப்பாய் சந்தைக்கருகாமையில் ஓர் தபால்பெட்டி நிறுவுவதற்கு முயற்சி எடுத்து கெதியில் நிறுவப்படும்

19. வாசிகசாலையும் நூல்நிலையமும்:
இச்சேவை இப்பகுதி மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் மிகவும் நன்மை அளிக்கின்றது. இச் சேவையை மேலும் அபிவிருத்தி செய்ய ஓர் வாசிகசாலைக்கமிட்டி ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. கடந்த ஆறு மாசத்திற்குள் இவ்வாசிகசாலைக்கு அருகாமையில் ஓர் தனிப்பட்ட நபரால் இதேதேவைக்கு ஓர் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு "செல்லமுத்து ஞாபக வாசிகசாலை எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

20. மானிப்பாய் பொது மயானம்:
இவ்விடத்தை நல்லமுறையில் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது. முன் வாசலுக்கு புதிய இரும்புக் கேற்றுகள் போடப்பட்டிருக்கிறது. மயானத்திற்கு சுற்று மதில்கள் மேற்கும் தெற்குப்பக்கமாகக் கட்டப்பட்டுவருகிறது. மயானத்திற்குள் பூஞ்செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. ஓர் நிரந்தர காவலாளி மேற்சொல்லிய மயானத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

21. நாய்கள்:
12 நாய்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. விசர் நாய்களின் நடமாட்டம் இல்லாததின் நிமித்தம் நாய்கள் பெரும்பாலும் சுடப்படவில்லை.

22. நிறைகளும் அளவுகளும்:
இப்பட்டினத்திலுள்ள வியாபாரிகள் பாவிக்கும் நிறைகளையும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் பரிசோதனை செய்து வருகிறார். பட்டினசபையால் இவ்வேலையை செய்வதற்கு போதிய பணமில்லாமையால் அரசாங்க அதிபர் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கடைசியாக 1965-ம் ஆண்டு ஐப்பசி மாதம் பட்டினசபை காரியாலயத்தில் இப்பரிசோதனை நடைபெற்றது.

23. சேரி ஒழிப்பு வீட்டுத்திட்டம்:
20 குடும்பங்கள் வரையில் பட்டினசபையின் பிற்பக்கமாக கயாம்புளி என்னும் குறிச்சியில் இருக்கிறார்கள். இவர்கள் மிகவும் வறியவர்கள். இவர்கள் இருக்கும் காணி சிவன்கோயிலுக்கு உருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானது இந்தக்காணியை கொள்வனவு செய்து இவர்களுக்கு வீடுகள் கட்டி கொடுப்பதற்கு 1958 ம் ஆண்டு அரசாங்கத்திடமிருந்து 30,000/– ரூபாய் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. இத்தொகையில் 25,000 ரூபாவை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் இக்காணியை கொள்வனவு செய்வதற்காக 16-11-60 ல் கொடுக்கப்பட்டது. இக்காணியை கொள்வனவு செய்வதற்கு என்னும் ரூபாய் 10,000/- கொடுக்கும்படி அரசாங்க அதிபர் கேட்டிருந்தார். பட்டினசபையிடம் தற்சமயம் பணவசதியில்லாமையினால், அக்காணிக் கொள்வனவு தடைப்பட்டிருக்கிறது.

24. வீடமைப்பும் நகரதிருத்தமும்:

| | 1963 | 1964 | 1965 |
|---|---|---|---|
| வீடு கட்டுவதற்காகக் கிடைத்த உத்தரவுச் சீட்டு விண்ணப்பம். ... | 57 | 48 | 42 |
| உத்தரவு வழங்கப்பட்டகட்டிடவிண்ணப்பம் | 49 | 38 | 13 |
| உத்தரவு வழங்க மறுக்கப்பட்ட விண்ணப்பம் | 8 | 10 | 29 |
| பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடச் சான்றிதழ் வழங்கப்பட்டது. ... ... | 40 | 58 | 16 |

25. காணி கொள்வனவு, குத்தகை விற்பனவு:

பட்டினசபைக் கருகாமையிலுள்ள 3 பரப்புக்காணியை பட்டினசபை நகரமண்டபத்தை விஸ்தரிக்கும் பொருட்டு கொள்வனவு செய்ய 10,000/– ரூபாய் கடன் எடுத்து யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கு செலுத்தப்பட்டிருக்கிறது. இக்காணி என்னும் கொள்வனவு செய்யப்பட்டு பட்டினசபைக்கு கொடுக்கப்படவில்லை.

மானிப்பாய் பெற்றேரல் சாலேக்கு அருகாமையில் உள்ள சிவன் கோயில் காணியை நகரசுத்தி தொழிலாளருக்கு வீடுகட்டிக் கொடுக்கும் நோக்கமாக குத்தகை எடுக்கப்பட்டிருக்கிறது.

26. சட்டமியற்றல்:

(1) ஆடொன்றுக்கு கொல்களக்கட்டணம் 25 சதத்திலிருந்து 50 சதமாக கூட்டப்பட்டிருக்கிறது.

(2) 2,000/- ரூபாவுக்கு மேலதிக வருடவருமானமுள்ள ஆலே ஒன்றுக்கு உத்தரவுச் சீட்டுப்பணத்தை 50/- யிலிருந்து 250/- ரூபாயாகவும், 2000 - ரூபாவுக்கு குறைந்த வருடவருமானமுள்ள ஆலேக்கு 100 - ரூபாயாகவும் உத்தரவுச் சீட்டுப்பணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சுடலைக் கட்டணம் மானிப்பாயிலும் மானிப்பாயுக்கு அப்பால் இருந்து வரும் சவத்திற்கு ரூபாய் 1 - ஆய் அறவாக்கப் பட்டுவந்த சுடலைக் கட்டணத்தை மாற்றி மானிப்பாயில் இருந்து வரும் பிணத்திற்கு 1 - ரூபாயாகவும், மானிப்பாய்க்கு அப்பால் இருந்துவரும் பிணத்திற்கு 2 – ரூபாயாகவும் கட்டணம் அறவாக்க விதிக்கப்பட்டிருக்கிறது.

27. மின்சாரம்:

பட்டினத்துக்குத் தேவைப்பட்ட மின்சாரம் முழுமையும் சுன்னுகு மின்சக்தியிடமிருந்து இப்பட்டினத்தில் அமைக்கப்பட்டிருக்கும் 80. கெ. டவு. யு. எ மின்மாற்றிமூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது. இந்த 80 கெ. டவுயு. எ. மின்மாற்றியிலிருந்து விநியோகிக்கப்படும் மின்சாரம் பட்டினத்திற்கு காணுமல் இருந்ததினுல் மின் இலாகாவுடன் வாதாடி இப்போ 150 கெ. வி. எ. ஆக மாற்றப் பட்டிருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். மின்சாரத்தைக் காத்திருந்த பலருக்கு இப்போ விநியோகம் செய்யப் பட்டிருக்கிறது.

மின்சாரக் கட்டணத்தில், கோவில்களுக்கு விதித்த கட்டணத்தை தவற்றி, எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

மின்சார விஸ்தரிப்புகளின் நீளம் ... ... 4 மைல்.
மின்சாரம் பாவிப்போரின் எண்ணிக்கை —344.

28. கணக்குப் பரிசோதனை:

இத்த வருடத்தில் செப்ரெம்பர் - ஒக்டோபர் மாதத்தில் அரசாங்க கணக்குப் பரிசோதனைப் பகுதியினரால் பரிசோதனை நடாத்தப்பட்டது. இப்பரிசோதனையில் குறிப்பிடத்தக்க பிழைகள் எதுவும் அவதானிக்கப்படவில்லை.

29 விசேட பணிகள்:

வட்டாரங்களைக் கூட்டிப் பிரிவினைகள் செய்வதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மானிப்பாயிலுள்ள சந்திகள் பலது அகலிக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வருடத்தில் தெரு வீதிகளும் பல இடங்களில் கதியால் வெட்டி அகட்டப்பட்டன. இப்படி பதினுறு இடங்களில் வீதிகள் பெரிதாக்கப்பட்டன.

அரசாங்கப் பணஉதவியுடன் நெசவு ஆலை ஒன்று மானிப்பாயில் ஸ்தாபிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினசபையின் சரித்திரத்தில் முதல் முதலாக தலைவர் நிதி ஒன்று உண்டாக்கப்பட்டு இருக்கின்றது,

கோழிகளுக்கு நோய்வராமல் மாதம் இரண்டு முறை மானிப் பாயில் ஊசி ஏத்தப்படுகின்றது.

1965 ம் ஆண்டு பட்டினசபைக்கு ஓர் சின்னமும் (கிறெஸ்) குறிக்கோளும் உண்டாக்கப்பட்டன. இந்த ஆண்டில் பட்டினசபை வாழ்த்துப்பாவும் இயற்றப்பட்டது.

பட்டினசபை காரியாலயத்துக்கு கதிரைகள், மேசைகளும், யன்னல்களுக்கு கேட்ரின்ஸ் சீலைகளும்: மேசைச்சீலைகளும் வாங்கப் பட்டன.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்கமாக ருத்தலாய் குறிக்கப்படும் விலைக்கு மீன்கள் விற்கும் நிலையத்தை சந்தைக்குள் உண்டாக்கியது அத்துடன் மலைநாட்டு மரக்கறிகள் விற்கும் நிலை யங்களும், கருவாடு விற்கும் நிலையத்தையும் வேறுபல இதற்கு முன் சந்தையுக்குள் விற்கப்படாத பொருட்களையும் விற்கக் கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டன.

பட்டினசபை கூட்டுத் தொழிலாளர்களும் வேறு பத்துகூலி யாட்களும் ஏழு நாட்களுக்குள் பட்டணம் முழுவதையும் சுத்தம் செய்தனர். இதன் பயனுல் ரேட்டில் முள்ளுகள், செடிகள், இல் லாமல் இருப்பதைக் கவனிக்கலாம்.

அரிய பொருட்கள் அடங்கிய சுகாதார வார மலர் அச் சிட்டு இலவசமாக வரியிறுப்போருக்கு கொடுக்கப்பட்டது. பட்டின சபை காரியாலயத்துக்கு குழாய்மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது.

**(30) பிரபல பிரமுகர்களின் வரவு:**

மறைந்து போன உலகப் பிரசித்திபெற்ற கலாநிதி ஆனந்த குமாரசாமி அவர்களின் மனைவி 14-9-65யில் இப்பட்டின சபைக்கு விஷயம் செய்துள்ளார். அவவை வரவழைத்து வரவேற்புபசாரம் ஒன்று பட்டினசபைக் கூட்ட மண்டபத்தில் பட்டினசபை அங்கத் தவர்களாலும் மற்றும் பொது மக்களாலும் அளிக்கப்பட்டது. பின்பு மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும், மானிப்பாய் மகளிர்பாட சாலைக்கும் கூட்டிப்போய் பிள்ளைகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட் டது.

(1) பட்டினசபை நிர்வாகத்தை திறம்பட நடத்துவதற்கு எனக்கு அளித்த கீழ்வரும் கமிட்டிகளுக்கு எனது மனமார்ந்த நன் றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) வாசிகசாலை கமிட்டி.
(2) 1965-ம் சுகாதார வார விழா கமிட்டி.
(3) சந்தை அபிவிருத்திக கமிட்டி.
(4) 1965-ம் சாகித்திய தின விழா கமிட்டி:
(5) வாலிபர் உடற்பயிற்சிக் கமிட்டி.

கீழ்வரும் நன்கொடைகளை அளித்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்:—

(1) தண்ணீர் ராங்கியும், குழாய்மூலம் தண்ணீர் கயாம்புளி வாசிகளுக்கு அழித்த செலவு;— திரு. எஸ். இராசா கட்டுடை
(2) கூழக்கரத்தை அன்பளிப்பு:- திரு. சி. வயிரமுத்து.
(3) மூன்று மாதிரிக்கடைகளைச் சந்தையில் கட்டி அன்பளித்தவர்: திரு. கெ. இராசலிங்கம்.
(4) சுடலை மதில் கட்டிய செலவு; திரு. ரி. தேவராசா
(5) சுடலை மதில கட்டிய செலவு: திரு. கெ. இராசமாணிக்கம்.
(6) சுடலைக்கு இரும்பு கேற்றுகள் அன்பளித்தவர் திரு. ரி. செல்லையா
(7) 5பஸ் பிரயாணிகள் தங்கும் இடங்கள் கட்டி அன்பளித்தவர்கள்:
2—மானிப்பாய் கோவிற்பற்று முன்னேற்றச் சங்கம்
1— இராசன் இரும்பு வேலை.
1— என். எஸ். தாசன் அன் கொம்பனி.
1— மில்க் வைற்சோப்.
(8) விற்று மில்க் இலவச விநியோகம்: செஞ்சிலுவைச் சங்கம்
(9) போட்டிகளுக்குப் பரிசுகள் ஡ேஸ் பிறுன்ட் கொன்வச்சனறி.
இலவசமாக உதவியவர்கள்:— கணபதிப்பிள்ளை அன் சகோதரர்.

பிரபலமான வீதிகளிலுள்ள சந்திகளை அகட்டி வாகனப் போக்குவரத்தை மக்களுக்கு இடையூறின்றி அமைப்பதற்கு தங்கள் தங்கள் காணியில் சில பகுதியை அன்பாய் அளித்த கீழ்வரும் நபர்களுக்கு எனது விசேஷ நன்றி உருத்தாகுக:—

1. திருமதி. ஐயாத்துரை.
2. ,, லைமன்.
3. திரு. செல்வரத்தினம்
4. திருமதி முத்துவேலு
5 திரு. நவரத்தினராசா
6. திரு. லோகநாதன்
7. திரு. பொன்னப்பா
8. திருமதி முருகேசு
9. திரு. குணவர்த்தனு
10 திரு சதாசிவம்
11. திரு. சிறிநடராசா
12. திரு. கெ சபாபதி.
13 திரு. ஆர் சிவஸ்கந்தா
14. திரு தம்பிமுத்து
15. திரு. நவரத்தினம்
16. திரு. அரியகுட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது விசேஷ நன்றியை – திருமதி. ரி. முருகேசு அவர்களுக்கும் உரித்தாகுக இவ தனது காணியில் பெரும் பகுதியை 2—ம் வட்டாரத்திலுள்ள வயல்களுக்கும் கெலமன்கம தண்ணீர் வாய்க்காலுக்கும் போக ஓர் ஒழுங்கையைநிறுவ அன்பாய் அளித்திருக்கிறு, அன்பளித்தவரின் விருப்பப்படி இவ் ஒழுங்கையை ''திலகவதி வீதி' என அழைக்கப்படும். இவ தனது காணியை விட்டுக் கொடுக்காவிடில், வீதி உண்டாக்க முடியாமல் இருந்திருக்கும். தொடர்ந்து விடட திரு. சபாபதிக்கும் எனது நன்றி.

(அ) என்னுடன் ஒத்துழைத்த பட்டினசபை நாலு அங்கத்தவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

(ஆ) என்னுடைய கடமைகளை காலதாமதமின்றி அன்றன்றே திறம்பட செய்வதற்கு முழுமனத்துடன் உதவிபுரிந்த காரியதரிசிக்கும் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு உத்தியோகத்தரும் தனது கடமையில்லாவிடினும் பல தொண்டுகளைச் செய்து என்னை ஊக்குவித்ததுக்கு நான் சந்தோஷப்படுகிறேன். அவர்களின் ஒத்துழைப்பே அளப்பெரும் சேவை

(இ) மானிப்பாய்ப் பகுதி சுகாதார டாக்குத்தர். வலிமேற்கு காரியாதிகாரி, வடமாகாண அதிபர், உதவி அதிபர், மின்சாரப் பகுதி அதிபர், வடமாகாண விவசாயப் பகுதி அதிபர், பகிரங்க வேலை என்சினியர், இவர்கள் போன்ற உயர்தர அரசாங்க உத்தியோகத்தர்கள். பட்டினசபைக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்ததற்காக எனது நன்றி

(ஈ) மானிப்பாய் பட்டினத்தில் இருக்கும் பாடசாலை அதிபர்களும், உபாத்திமார்களும் மற்றும் பொதுமக்களும் அளித்த ஆதரவுக்கு என்ன பதில் கடமை செய்வேன் எனத் தயங்குகிறேன்.

(உ) இப்பட்டினசபையின் நிர்வாகத்தில் ஊக்கத்துடன் பங்குபற்றியும் உதவியாயுமிருந்த யாழ்ப்பாண உதவி ஸ்தல ஸ்தாபன அதிபர் திரு. எஸ். சி மாணிக்கவாசகர் அவர்களுக்கு எனது அன்பு நிறைந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

(ஊ) எனது வேண்டுகோளுக்கிணங்கி பிரதமவிருந்தினராகவும் பேச்சாளராகவும் சமுகந்தந்து எங்கள் விழாவைச் சிறப்பித்ததற்காக உயர் நீதிமன்ற அரசர் உயர்திரு P. ஸ்ரீகந்தராசா அவர்களுக்கும் எங்கள் பட்டினசபை என்றும் கடமைப்பட்டுள்ளது இவர் இளைப்பாறியபின் சைவத்தொண்டிலும் பொதுச்சேவையிலும் ஈடுபட்டு எங்கள் நாட்டுக்கு வழிகாட்டியாயும் தூண்டாமணி விளக்காயும் பிரகாசிக்கவேண்டுமென்பது எங்கள்வேணவா'

சி. இராசேந்திரன்
தலைவர்,
பட்டினசபை, மானிப்பாய்.

பட்டினசபைக் காரியாலயம்,
மானிப்பாய், 30.7-1966.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Visit

# JAFFNA PHARMACY

For

PATENT MEDICINES

MILK FOOD & GROCERIES

Specialist for

**Surgical Instruments**

**Surgical Apparatus**

**&**

**Medical Rubber Goods**

# யாழ்ப்பாண பார்மஸி

*யாழ்ப்பாணம்.*

*T' Phone:* **467** — தொலைபேசி: **467**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Manufacturers of

# Yarl Brand

**Guaranteed Pure Aluminium Wares**

*Importers & Distributors of*

- Stainless Steel Wares
- Sports Cups and
- Gift Wares

*Pioneers in*

- *Electro Deposition of Metals*
- *Gold, Silver, Nickel, Chromium*
&
- *Oxidizing*

# Yarl Metal Industries

250—252, K. K. S. ROAD

**JAFFNA**

T'grams; **YARL METAL** T'Phone: **7049**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sivaraja   Indiraraja

போன்: 585

# கே. என். எம்.

# மீரான் சாஹிப்

**தங்கப்பவுண் நகைமாளிகை**

**கன்னாதிட்டி, — யாழ்ப்பாணம்.**

Mrs Muragesu





**புத்தம் புதிய டிசைன்களில்**

## தங்க வைர நகைகளை

**உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள**

## தங்கப்பவுண் நகை மாளிகைக்கு

விஜயம் செய்யுங்கள்

**Visit** Phone: 585

# K. N. M. MEERAN SAHIB

**SOVEREIGN PALACE**

**KANNATHIDDY, JAFFNA.**

நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org